சபரகமுவ மாகாண கல்வித் திணைக்களம்

# கணக்கீடு – 33 தரம் - 12

# Covid – 19 இடர் விடுமுறைகால பயிற்சி - 9

## தேர்ச்சி – 4.8 : வழு திருத்தம்

வாரம் - 9
இரத்தினபுரி தமிழ் தேசிய கல்லூரி

தயாரிப்பு : சஜித்.sp
BBA(Financial Spl), University of Colombo

Sajith.SP

### வெளிகாட்டும் வழு திருத்தம் - பயிற்சிகள்

**01.** மகான் வியாபாரத்தின் பரீட்சை மீதி சமப்படவில்லை. இப்பரீட்சை மீதி வேறுபாட்டைப் பரிசோதனை செய்ததில் பின்வரும் பிழைகள் வெளிப்பட்டன.

1. செலுத்திய மின்கட்டணம் ரூபா 4 000 காசுக் கட்டுப்பாட்டுக் கணக்கில் மாத்திரம் பதியப்பட்டிருந்தது.
2. செலுத்திய வாடகை கட்டணம் ரூபா 15 000 காசுக் கட்டுப்பாட்டுக் கணக்கில் மாத்திரம் பதியப்பட்டிருந்தது.
3. செலுத்திய ஊழியர் சம்பளம் ரூபா 20 000 சம்பளக் கணக்கில் மாத்திரம் பதியப்படவில்லை.
4. பெற்ற தரகுவருமானம் ரூபா 12 000 காசுக் கட்டுப்பாட்டுக் கணக்கில் மாத்திரம் வரவில் பதியப்பட்டிருந்தது.
5. கிடைத்த முதலீட்டு வருமானம் ரூபா 8 500 முதலீட்டு வருமானக் கணக்கில் மாத்திரம் பதியப்படவில்லை.
6. உரிமையாளர் பொருள் பற்று ரூபா 15 000 பற்றுக் கணக்கில் பதியப்பட்டிருக்கவில்லை.

**வேண்டப்படுவது:**
மேற்கூறிய வழுக்களைத் திருத்துவதற்கான பொதுநாட்குறிப்பில் திருத்தற் பதிவுகள்

**02.** ஆரவ் நிறுவனத்தின் பரீட்சை மீதியானது இணங்கவில்லை. வேறுபாட்டுக்குரிய தொகையானது தொங்கல் கணக்கிற்கு மாற்றப்பட்டது. பரிசோதனை செய்ததில் பின்வரும் பிழைகள் வெளிப்பட்டன.

1. ஆரவ் தனிப்பட்ட தேவைக்கு எடுத்த தொகை ரூபா 12 000 பற்றுக் கணக்கில் ரூபா 21 000 என பதிவு செய்யப்பட்டிருந்தது.
2. காசுப் பெறுவனவு நாட்குறிப்பேட்டின் கழிவு நிரலின் மொத்தம் ரூபா 8 500 ஆனது பொதுப் பேரேட்டில் உரிய கழிவுக் கணக்கில் ரூபா 5 800 என மாற்றப்பட்டது.
3. தளபாட திருத்தல செலவுக் கொடுப்பனவு ரூபா 20 000 தளபாடக் கணக்கில் வரவில் ரூபா 2 000 என பதிவு செய்யப்பட்டது.
4. மதிப்புக் குறைப்பு நட்டம் பதிவழிப்பு ரூபா 10 000, கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கில் வரவில் பதியப்பட்டது.
5. எழுதுகருவி கொள்வனவு ரூபா 4 500 காசுக்கட்டுப்பாட்டுக் கணக்கில் செலவில் ரூபா 5 400 எனவும், எழுதுகருவி கணக்கில் வரவில் ரூபா 4 000 என பதிவு செய்யப்பட்டிருந்தது.
6. சம்பளக் கணக்கு மீதி ரூபா 8 000 எனும் தொகையினால் கூட்டிக்கூட்டப்பட்டது.
7. கிடைத்த தரகு வருமானம் ரூபா 14 000 உரிய வரமானக் கணக்கில் 4 000 என பதியப்பட்டிருந்தது.

**வேண்டப்படுவது:**

**1)** மேற்கூறிய வழுக்களைத் திருத்துவதற்கான பொதுநாட்குறிப்பில் திருத்தற் பதிவுகள்
**2)** தொங்கல் கணக்கு
**3)** பரீட்சை மீதி எப்பக்கத்தில் எந்தளவு தொகையினால் வேறுபட்டிருக்கும்
**4)** பரீட்சை மீதியின் வரவு பக்க கூட்டுத்தொகை ரூபா 340 000 ஆக இருப்பின் பரீட்சை மீதியின் செலவு பக்க கூட்டுத்தொகை எவ்வளவாக இருக்கும்.

**03.** தர்மிகா நிறுவனத்தின் நிலுவைச் சமப்பாடு சமப்படவில்லை, வேறுப்பாட்டுத்தொகை தொங்கல் கணக்கிற்கு மாற்றப்பட்டது. பின்வரும் வழுக்கள் கண்டறியப்பட்டது.

1. தளபாடக் கணக்கு மீதி ரூபா 20 000 பரீட்சைமீதிக்கு கொண்டுவரப்படவில்லை.
2. சம்பளக் கணக்கு மீதியானது ரூபா 15 000 பரீட்சை மீதிக்கு மாற்றப்படவில்லை.
3. தரகுவருமானக் கணக்கு மீதியானது ரூபா 8 000 பரீட்சைமீதியில் வரவில் பதியப்பட்டது.
4. பற்றுக் கணக்கு மீதியானது ரூபா 12 000 பரீட்சைமீதியில் வரவில் ரூபா 21 000 என பதிவு செய்யப்பட்டிருந்தது.
5. உட்திரும்பல் கணக்கின் மீதி ரூபா 15 000 ஆனது பரீட்சைமீதியில் செலவில் ரூபா 1 500 என பதிவு செய்யப்பட்டிருந்தது.
6. விற்பனைக் கணக்கின் நிலுவை ரூபா 225 000 ஆனது பரீட்சை மீதியிற்கு ரூபா 220 000 என கொண்டு செல்லப்பட்டது.

**வேண்டப்படுவது:**

**1)** வழுக்களைத் திருத்துவதற்கான பதிவுகள்

Sajith.SP